டெல்லி முதலமைச்சர்

# அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 18–

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:–

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்குப் பிறந்த நாள் நல்வாழ்த்துகள்.**



**தங்களது கட்சி தங்களுடன் உறுதியாக நிற்பதைப் போலவே, மக்களும் அதே அளவு உறுதியுடன் தொடர்ந்து தங்களுக்கு ஆதரவாக நிற்பார்கள். மக்களுக்குப் பணியாற்றுவதில் தாங்கள் கொண்டுள்ள சோர்வறியா அர்ப்பணிப்பை வரும் ஆண்டு மேலும் வலுப்படுத்தட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் ஜெயக்குமார்!

# “ஸ்டிக்கர் பாய்ஸ்” என பெயர் பெற்றவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பல்வேறு ஆதாரங்களுடன் அ.தி.மு.க. ஜெயக்குமாருக்கு பதிலடி!

**சென்னை, ஆக 18–**

**மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார் ஜெயக்குமார் என்றும் “ஸ்டிக்கர் பாய்ஸ்” என பெயர் பெற்றவர்கள் யார்? என நாட்டு மக்களுக்குத் தெரியும் என்றும் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பல்வேறு ஆதாரங்களை எடுத்துக் கூறி அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு பதிலடி கொடுத்துள்ளார்.**



நேற்று முன்தினம் (16.08.2024) நாகப்பட்டினத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

ஸ்டிக்கர் ஒட்டும் பணியை தி.மு.க. செய்கிறது என அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். ஸ்டிக்கர் பாய்ஸ் என பெயர் பெற்றவர்கள் யார்? என நாட்டு மக்களுக்குத் தெரியும். அ.தி.மு.க.வினரை தான் ஸ்டிக்கர் பாய்ஸ் என சொல்வார்கள்.

2015ல் சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்ட போது தன்னார்வலர்கள், தனியார் அளித்த நிவாரண பொருட்களில் எல்லாம் அ.தி.மு.க.வின் ஸ்டிக்கரை ஒட்டியவர்களை இந்த நாடு மறக்காது. ஸ்டிக்கர் பாய்ஸ் என்றால் அ.தி.மு.க. தான் மக்களுக்கு நினைவுக்கு வரும்.

அம்மா சிமெண்ட் எப்போது எடுத்தார்கள் என்பது அண்ணா திமுகவினருக்கே தெரியாது. தரமான நல்ல சிமெண்ட் தரவேண்டும் என்பதற்காக வலிமை சிமெண்ட் என்ற பெயரில் தரப்படுகிறது. அம்மா சிமெண்டை எடப்பாடி பழனிச்சாமி காலத்திலேயே கைவிட்டு விட்டார்கள். வலிமை சிமெண்டை ஏழை, எளிய மக்களுக்கு தரமான சிமெண்ட் கிடைப்பதற்காக அரசின் சார்பாக தருகிறோம். அதுவும் ஸ்டிக்கர் ஒட்டவில்லை. எங்களுக்கு ஸ்டிக்கர் மாற்றி ஒட்டும் பழக்கமும், ஸ்டிக்கர் ஒட்டும் பழக்கமும் இல்லை.

முதலமைச்சர் கொண்டுவந்த எந்த திட்டமாக இருந்தாலும் அது திமுகவின் லேபிள் ஒட்டப்பட்ட திட்டங்களே தவிர, மற்றவர்களை பார்த்து காப்பி அடித்த எந்த திட்டங்களும் கிடையாது. யாரையும் காப்பி அடிக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் சொந்த லேபிளிலேயே நிற்க முடியும். அதற்கான சக்தி எங்களுக்கு உள்ளது.

அம்மா மருந்தகம் வேறு, முதல்வர் மருந்தகம் என்பது வேறு. அம்மா மருந்தகத்தை அ.தி.மு.க.வினரே ஞாபகம் வைத்திருக்கிறார்களா? என தெரியவில்லை.

### முதல்வர் மருந்தகம் புதிய திட்டம்!

பொதுப்பெயர் வகை (ஜெனரிக்) மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யும் வகையில், ‘முதல்வர் மருந்தகம்’ என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது.

திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, மருந்தாளுநர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான கடனுதவியோடு மூன்று இலட்சம் ரூபாய் மானிய உதவியாக அரசால் வழங்கப்படும், D.Pharm மற்றும் B.Pharm படிப்பு முடித்தவர்களுக்கு சொந்த தொழில் தொடங்கிட வாய்ப்பு அளிக்கும் அற்புதமான திட்டமாகும்.

மருந்தகங்களுக்குத் தேவையான தரமான மருந்துகள், TNMSC மூலம் உரிய வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கொள்முதல் செய்யப்படும். குறிப்பாக, பொதுப்பெயர் வகை (ஜெனரிக்) மருந்துகள் மிக குறைவான விலையில் விற்பனை செய்யப்படும்.

2016 ஆம் ஆண்டு முதல் அன்றைக்கு ஆட்சியில் இருந்த அ.தி.மு.க. ஆட்சியில் புதிதாகத் தொடங்கப்பட்ட கூட்டுறவு மருந்தகங்களுக்கு அம்மா மருந்தகம் எனப் பெயரிடப்பட்டது. இம்மருந்தகங்கள் கூட்டுறவு மருந்தகங்களை போன்றே சங்கங்களால் நடத்தப்பட்டன; தொழில் முனைவோர் ஈடுபடுத்தப்படவில்லை.

கூட்டுறவு மருந்தகம் மற்றும் அம்மா மருந்தகம் 380 எண்ணிக்கையில் மட்டுமே மாநிலம் முழுவதும் செயல்படுகின்றன. அம்மா மருந்தகங்களில் குறிப்பிட்ட வகை மருந்துகள் (Branded medicines) மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன.

அதி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டமாக இருந்தாலும் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அம்மா உணவகத்தை கடந்த மாதம் முதலமைச்சர் நேரில் சென்று திடீரென ஆய்வு நடத்தி அம்மா உணவகங்களை சிறப்பாக பராமரிக்க ரூ.21 கோடி ஒதுக்கி உத்தரவிட்டார்.

### விக்கிரவாண்டித் தேர்தலை கண்டு அஞ்சி ஓடியவர்கள்!

மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடித்து போடும் வேலையை ஜெயக்குமார் நிறுத்திக் கொள்வார் என நம்புகிறோம்.

எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் சந்திக்க தயார் என வீர வசனம் பேசி இருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றாவது இடத்திற்கும் நான்காவது இடத்திற்கும் மக்களால் புறந்தள்ளப்பட்டவர்கள், விக்கிரவாண்டி தேர்தலை கண்டு அஞ்சி ஓடியவர்கள், ஏதோ இன்று தைரியமாக இருக்கிறோம் என்பது போல பேசி உள்ளார். அங்குள்ளவர்கள் கிளம்பி விடக்கூடாது என்பதற்காக ஜெயக்குமாரை கொண்டு எடப்பாடி பழனிசாமி இந்த அறிவிப்பை தந்திருக்கிறார். அதி.மு.க. கூடாரம் காலி ஆகி வருகிறது என்பதுதான் உண்மை. அங்கிருந்து செல்பவர்களை தடுப்பதற்காகத் தான், ‘எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் சந்திக்க தயார்’ எனக் கூறியுள்ளார். தேர்தல் வந்தால் சந்தியுங்கள் உங்கள் நிலைமை என்ன? என்பது நாடறிந்த உண்மை.

எப்பொழுது தேர்தல் நடந்தாலும் சந்திக்க தயார் என்று அ.தி.மு.க. சொல்லும். ஆனால் தேர்தல் நடக்கும் போதெல்லாம் தலை தெறிக்க ஓடிவிடுகிறது. விக்கிரவாண்டி தேர்தலில் ஏதேதோ காரணம் சொல்லி போட்டியிலிருந்து விலகி ஓடினார்கள்.

### நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றாமிடம்!

நாடாளுமன்றத் தேர்தலில் 11 தொகுதிகளில் 3 ஆம் இடம் பிடித்தார்கள். கன்னியாகுமரியில் 4 ஆம் இடம். விளவங்கோடு இடைத்தேர்தலில் அதி.மு.க. 5000 வாக்குகள் கூட வாங்க வில்லை. இவர்களா ஆட்சியை பிடிக்க போகிறார்கள்?

பா.ஜ.க. எதைச் சொன்னாலும் அதைச் செய்கிற அடிமைக் கட்சி அதி.மு.க. என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மத்திய அரசைக் கண்டிப்பதாக தீர்மானம் இயற்றினாலும் பா.ஜ.க.வின் என்ற பெயரைக் குறிப்பிட தைரியமில்லாத கட்சி அ.தி.மு.க.

### மோடி அரசாங்கத்தின் செல்லப்பிள்ளை எடப்பாடி!

அ.தி.மு.க.வின் உட்பூசல் இன்னும் ஓயவில்லை. அதனால் அவசர செயற்குழுக் கூட்டம், ஆலோசனை எல்லாம் நடக்கின்றது. இதை மறைப்பதற்காகப் பொத்தாம் பொதுவாகத் தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க.வின் – மோடி அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாகத்தான் எடப்பாடியும் அ.தி.மு.க.வினரும் நடந்துகொண்டு வருகின்றனர். உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசி அரசியல் நாடகம் நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆட்சியில் தமிழ்நாட்டு நலனைப் பலி கொடுத்த அ.தி.மு.க.வினரை தமிழ்நாட்டு மக்கள் எப்பொழுதும் மன்னிக்க மாட்டார்கள்.

இன்றைய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவது இலக்கு என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார். அந்த இலக்கை தி.மு.க. அடையும்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் சார்பில் சட்டம் ஒழுங்கு பற்றிய ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் சார்பில் மாதம்தோறும் தரவரிசை செய்யப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. அதன்படி

10.07.2024இன் அறிக்கை வெளியாகி உள்ளது. இதன் அடிப்படையில் இந்திய அளவில் தமிழ்நாடுதான் சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் முதல் இடத்தில் உள்ளது.

அதாவது 95.47 புள்ளிகளைப் பெற்று சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 2வது இடத்தை 93.96 புள்ளிகளைப் பெற்று மிசோரம் பிடித்துள்ளது. 3ஆவது இடத்தில் தெலங்கானா உள்ளது.

இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால் மிசோராம் மக்கள் தொகை 11 இலட்சம் தான். 3வது இடம் பிடித்த தெலுங்கானாவின் மக்கள் தொகை 4 கோடி தான். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 8 கோடி.

கொடநாடு கொலை கொள்ளை, சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை என அதி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்ததை மறந்து விட்டு பேசுகிறார் ஜெயக்குமார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் விவகாரத்தில் 13 பேர் சுட்டுக் கொல்லப் பட்டதை, தொலைக்காட்சியை பார்த்து தெரிந்து கொண்டதாகக் கூறியவர்தான் எடப்பாடி பழனிசாமி.

### குட்கா ஊழலில் அ.தி.மு.க.!

முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா மற்றும் கே.சி.வீரமணி உள்ளிட்டோர் குட்கா ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்பது நாட்டிற்கே தெரிந்த செய்தி. அவர்களை இன்றளவும் கட்சியில் வைத்துக்கொண்டு போதைப்பொருள் புழக்கம் பற்றி ஜெயக்குமார் பேசுவது வெட்கக்கேடு.

தி.மு.க. அரசு பதவியேற்ற நாளிலிருந்து 2022 ஆண்டு ஜூன் வரை ரூ.9.19 கோடி மதிப்புள்ள 152.96 டன் குட்கா பான்மசாலா பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

குட்கா, பான்மசாலா விற்பனை செய்த 75 கடைகளுக்கு Emergency Prohibition Order என்ற அடிப்படையில் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 10.8.2022 அன்று தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுப்பதற்காக முதன்முதலில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. தமிழ்நாடு அரசால் போதைப் பொருட்களுக்கு எதிராக சிறப்பு அதிரடி சோதனைகள் 2021ஆம் ஆண்டு டிசம்பரில் “இரு வார கால” ஆப்பரேஷனாக நடத்தப் பட்டது.

மார்ச் 2022இல் ஆப்பரேஷன் “கஞ்சா வேட்டை 2.0”, டிசம்பர் மாதம் ஆப்பரேஷன் கஞ்சா வேட்டை 3.0 நடத்தப்பட்டது. இதன்மூலம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தொடர்பாக 12 ஆயிரத்து 294 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 17 ஆயிரத்து 250 நபர்கள் கைது செய்யப்பட்டு,

26 ஆயிரத்து 525 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குட்கா விற்பனை தொடர்பாக 48 ஆயிரத்து 838 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 50 ஆயிரத்து 875 நபர்கள் கைது செய்யப்பட்டு, 11 லட்சத்து 59 ஆயிரத்து 906 கிலோ குட்கா பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

அதி.மு.க. ஆட்சியில் தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, திராவிட மாடல் ஆட்சியில் 3வது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

### 6384 புதிய தொழில் நிறுவனங்கள்!

புதிதாக தொழில்களிலும் தமிழ்நாடு தான் இந்தியாவில் முதலிடம். திராவிட மாடல் ஆட்சிப் பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் 6384 புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

சட்டம் ஒழுங்கு சரியில்லாமல் இருந்திருந்தால் தமிழ்நாடு எப்படி முதலீடுகள் ஈர்ப்பதிலும், புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்குவதிலும் முதன்மை இடத்திற்கு முன்னேறியது ?

இவை அனைத்தும் கடந்த 3 ஆண்டுகளில் நிகழ்ந்த சாதனைகள். அதி.மு.க. ஆட்சியில் புதியதாக தொழில் தொடங்கியவர்களின் எண்ணிக்கையை நாம் கண்டதுண்டா?

நிச்சயமாக எந்த தேர்தல் வந்தாலும் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் தலைமையில் இருக்கக்கூடிய கூட்டணி தான் வெற்றி பெறும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆளுநர் மாளிகையில் நடந்த விருந்தில் அரசு சார்பில் முதலமைச்சர் கலந்து கொண்டதை கொச்சைப்படுத்தி வீர வசனம் பேசியுள்ளார். நாங்கள் வர முடியாது என்பதை கட்சியின் சார்பாக சொன்ன பிறகு, ஆளுநர் மாளிகையில் இருந்து முதலமைச்சரை தொடர்பு கொண்டு ‘நீங்கள் அவசியம் அதிலே கலந்து கொள்ள வேண்டும்’ என ஆளுநரே தொடர்புகொண்டு கேட்கும் நிலையில் நாட்டின் முதலமைச்சராக இருப்பவர் ஆளுநரை சந்திக்காமல் இருக்க முடியாது.

பாரதிய ஜனதாவிற்கு எந்த காலத்திலும் அடிபணிய வேண்டியதோ பயப்பட வேண்டியதோ அவசியம் இல்லை.

### பா.ஜ.க.வை தைரியமாக எதிர்க்கும் கட்சி தி.மு.க.

நாங்கள் பணிந்து போக வேண்டிய அவசியம் இல்லை. தைரியமாக பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சி தமிழ்நாட்டில் இருக்கிறது என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம் தான். எல்லோரையும் ஒருங்கிணைத்து மத்தியில் இருக்கும் ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்கியவர் முதலமைச்சர் என்பதை நாடு மறக்காது. நாங்கள் யாரைக் கண்டும் பயப்பட வேண்டியதில்லை, அஞ்ச வேண்டியதில்லை. மடியில் கனமில்லை, பயம் இல்லை. மடியில் கனம் அ.தி.மு.க.விற்குத்தான். பயம் அவர்களுக்கு தான். அவர்கள் வேண்டுமென்றால் அவர்கள் எஜமானர்களுக்கு பயப்படலாம், எங்களுக்கு எஜமானர்கள் பாரதிய ஜனதாவைச் சேர்ந்தவர்கள் அல்ல.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்துக்கும் செய்த நன்மைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். அவரது நூற்றாண்டு விழாவில் நாணயம் வெளியிடுவதை அ.தி.மு.க. அரசியல் ஆக்குகிறது.

கட்சியின் தலைவியின் மறைவுக்கு பிறகு அகில இந்திய தலைவர்களை அழைத்து ஒரு இரங்கல் கூட்டமாவது அவர்களால் போட முடிந்ததா? தங்களது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வை தாஜா செய்து கிடந்தவர்கள் அ.தி.மு.க.வினர்.

எதிர்க்கட்சியாக இருந்த போதும் கம்பீரமாக தி.மு.க. எதிர்த்தது; இப்பொழுதும் அதே கம்பீரத்துடன் பா.ஜ.க.வை எதிர்க்கிறது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

இதுவரை ரூ.6 கோடியே 5 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 5 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 16–08–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ரெ.கதிர்வேல், ஆத்தியடிபட்டி கிராமம், கறம்பக்குடி, புதுக்கோட்டை | – | 25,000/– |
| 2. | எம்.கே.நாராயணசாமி, தாசரகுண்டா வீதி, புத்தூர், சித்தூர், ஆந்திர மாநிலம் | – | 25,000/– |
| 3. | வி.அகஸ்டின், குழிமுகத்து விளைவீடு, சிதறால் அஞ்சல், கன்னியாகுமரி | – | 25,000/– |
| 4. | எஸ்.அந்தோணிமுத்து, வடக்கு தெரு, அச்சம்பாடு, சாத்தான்குளம், தூத்துக்குடி | – | 25,000/– |
| 5. | ஆ.இசக்கியம்மாள், சிந்துபூந்துறை, மதுரை ரோடு திருநெல்வேலி | – | 25,000/– |
| 6. | முகம்மது இப்ராஹிம், சீதக்காதி தெரு, சம்மந்தபுரம், இராசபாளையம், விருதுநகர் | – | 25,000/– |
| 7. | உ.முகம்மது இஸ்மாயில், மேற்கு தெரு, புதுவலசை, இராமநாதபுரம் | – | 25,000/– |
| 8. | எம்.தனலட்சுமி, இடைக்கட்டு கிராமம், உடையார்பாளையம், அரியலூர் | – | 25,000/– |
| | **மொத்தம்** | | **ரூ.2,00,000/-** |

## நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் பேருந்து மீது மின்அழுத்த கம்பி உரசிய விபத்தில்

# உயிரிழந்த அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரதாப்பின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 18–

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, கோவில்மட்டம் என்ற இடத்தில் அரசுப்பேருந்தின்மீது உயர்மின்அழுத்த கம்பி உரசிய விபத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த அரசுப் பேருந்து ஓட்டுநரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கெங்கரை 1 கிராமத்தில் நேற்று முன்தினம் (16.08.2024) காலை சுமார் 06.10 மணியளவில் கூட்டாடாவிலிருந்து கோத்தகிரி நோக்கி நான்கு பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்து கோவில்மட்டம் என்னும் இடத்தில் வந்துகொண்டிருந்தபோது உயர் மின்அழுத்தக் கம்பி பேருந்தின்மீது உரசிய விபத்தில் நான்கு பயணிகள் மற்றும் நடத்துநர் பேருந்துப் படிக்கெட்டின் வழியாக கீழே இறங்கி தப்பித்த நிலையில் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரதாப் (வயது 42) த/பெ. தேவராஜ் என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில், உயிரிழந்த அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரதாப் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தினை தொடர்ந்து நேற்றைய தினம் திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மதிவாணன், வன்னை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, செந்தில் மற்றும் பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர் பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர் .